மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**<u>அசல் வழக்கு எண். 27/2024 (பழைய அசல் வழக்குஎண். 219 /16 )</u>**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : தனக்குமார் (பி.வா.சா.1 )<br>த/பெ.க/பெ : மலைச்சாமி<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**04.02.2025**

**வாதிகள் தரப்பு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் இந்த வழக்கின் பிரதிவாதியா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மனைவிக்கு பதிலாக நான் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி பெயரில் தான் கிரைய பத்திரம் உள்ளது அதனால் அவர் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியாக இருக்கிறார். இந்த வழக்கில் எதிர் வழக்குரை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மனைவி பெயரில் நான் தாக்கல் செய்துள்ளேன். நான் சாட்சி சொல்லுவதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வந்ததா என்றால் இல்லை, என் மனைவிக்கு வந்தது. தாவா வழக்கு சம்மந்தமான விபரங்கள்அனைத்தும் எனக்கு தெரியுமா அல்லது எனது மனைவிக்கு தெரியுமா என்றால் எனக்கு தான் தெரியும். இந்த வழக்கின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.555, விஸ்தீரணம் 2 ஏக்கர் 42 செண்ட் ஆகும்.

2. தாவா சொத்தின் நான்கு மால் தெரியுமா என்றால் தெரியும். கிழக்கே தன்னக்குட்டி தேவர் நிலம், பால்ராஜ் நிலம், தனக்குமார் (எனது நிலம்), தொத்தன் நிலம் உள்ளது. தெற்கே எனது நிலம், வடக்கே மலைச்சாமி நிலம், மேற்கே முதலில் வீரன் நிலம், தற்போது கரந்தமலை நிலம் உள்ளது. வீரன், கரந்தமலை என்பவர்களை யார் என்று தெரியுமா என்றால் வீரன் 5 ம் வாதி பாலையாவுடைய சித்தப்பா ஆவார். 4 ம்

வாதி கரந்தமலை என்பவர் 5 ம் வாதி பாலயாவுடைய உடன் பிறந்த அண்ணன் ஆவார். வாதிகளும், பிரதிவாதிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை, வாதிகள் எனது அம்மா ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சமயத்தேவர் பெயரில் இருந்தது. மேற்படி அவர்களது குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்பட்டு புஷ்பம், செல்வம் என்பவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டது. பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரத்தை எனது எதிர் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் சொல்லி தான் நிரூபண வாக்குமூலத்தையும், எதிர் வழக்குரையும் எனது வழக்கறிஞர் தயார் செய்தாரா என்றால் சரிதான்.

3. சமயத்தேவருக்கு தாவா சொத்து பாத்தியம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சமயத்தேவர் பெயரில் உள்ள சொத்து ரசீது, பாகப்பிரிவினை பத்திரம், பட்டா அனைத்தையும் தாக்கல் செய்துள்ளேன். பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்ட வருடம் மற்றும் யாருக்கு இடையில் ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும், சமயத்தேவரின் அண்ணன், தம்பிக்குள் ஏற்பட்டது, எந்த வருடம் என்று ஞாபகமில்லை. சமயத்தேவரின் உடன் பிறந்தவர்கள் மூன்று நபர்கள் ஆவார். சமயன், வெள்ளைச்சாமி, செல்லம் ஆவார்கள். அவர்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டு புஷ்பம், செல்வம் ஆகியோர்கள் பெயரில் பட்டா நான் கிரையம் வாங்கும் போது இருந்தது. அதனடிப்படையில் தான் நான் கிரையம் வாங்கினேன்.

4. தாவா சொத்தை நான் யாரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் புஷ்பம், செல்வம் ஆகியோர்களிமிருடந்து பெற்றேன். நான் கிரையம் வாங்கும் போது சமயத்தேவர் உயிருடன் இல்லையென்றால் சரிதான். நான் சொத்தை கிரையம் வாங்கும் போது தாய்பத்திரம் சரிபார்த்து வாங்கினேனா என்றால் அப்போது அதெல்லாம் கேட்கவில்லை. ஒரு சொத்தை கிரையம் வாங்கும் போது வில்லாங்க சான்றிதழ் பார்த்து தான் வாங்க வேண்டும் என்றால் அந்த காலத்தில் அப்படி இல்லை. தாவா

சொத்தை எந்த வருடத்தில் கிரையம் பெற்றேன் என்றால் 2013 லிருந்து 2015 வருடத்திற்குள் இருக்கும். நான் கிரையம் பெற்ற தாவா சொத்தின் ஆவணத்தின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் சமயத்தேவர் பெயரில் வழங்கப்பட்ட ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன், அதில் தேதி, வருடம் குறிப்பிடப்படவில்லையென்றால் எனக்கு ஞாபகமில்லை.

5. தாவா சொத்து எதனடிப்படையில் சமயத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். சமயத்தேவரின் குடும்ப பூர்வீக சொத்து ஆகும். சமயத்தேவருக்கு தான் தாவா சொத்து பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், பாகபிரிவினை பத்திரம் மற்றும் பட்டா புத்தகம் தான் உள்ளது. வேற ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை. பட்டா புத்தகம் எந்த வருடத்தை சேர்ந்தது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு நான் கிரையம் வாங்கிய பிறகு வில்லாங்க சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் உரிமையாளர் எனது மனைவி 1 ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது மனைவியை விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )**